DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.235/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : மாரியப்பன் (Pw.1)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of March 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது புலியூரானில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் சாட்சி பட்டியலில் 2வதாக சேர்க்கப்பட்டுள்ள சுப்புதாய் எனது மனைவி 2023ம் வருடம் இறந்துவிட்டார். வழக்கு சம்பந்தமாக சமாதானமாக சென்றுவிட்டோம். கடந்த 07.12.2012ம் தேதியன்று மாலை 5.30மணியளவில் எனது மனைவியும், நானும் வீட்டில் இருந்தபோது பக்கத்து தெருவில் சத்தம் கேட்டதால் நானும் எனதுமனைவியும் சென்று பார்த்தபோது அங்கு சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்களை விலக்கிவிட்டதில் அடையாளம் தெரியாத சிலர் எங்களை கீழே

தள்ளிவிட்டதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது. நான் அருப்புக்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது திருச்சுழி போலிசார் என்னிடம் வெள்ளைதாளில் கையொப்பம் வாங்கிச் சென்றார்கள். புகாரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 07.12.2018ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் நான் வீட்டில் இருக்கும்போது மகாலிங்கம் அவர் புதிதாக கட்டிய வீட்டுச் சுவற்றில் தண்ணீர் அடிக்கும்போது என் மதினிக்கும் மகாலிங்கத்திற்கும், வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது என் மனைவி போய் மகாலிங்கத்தை சத்தம் போட மகாலிங்கம் அவருடைய மனைவி குருவத்தாய், மகாலிங்கம் அப்பா ராசு, மகாலிங்கம் சித்தப்பா சின்னக்காளை என்ற முத்துக்காளை ஆகிய நால்வரும் என் மனைவி, என் அத்தை முத்தம்மாள், என் மதினி பவுன்தாய் ஆகியோரை பார்த்து ஏன்டி தேவிடியா கூதி மகள்களா நீங்க என்னடி வக்காளத்துக்கு வர்ரதுன்னு சொல்லி மகாலிங்கம் என் மனைவியை கீழே தள்ளிவிட்டதில் என் மனைவிக்கு இடுப்பில் வலியால் கீழே கிடந்ததாகவும் ராசுவும், முத்துக்காளையும் மாறி மாறி என் அத்தையை கையால் அடித்ததில் கீழே விழுந்து மயக்கம் அடைந்ததாகவும் அப்போது சத்தம் கேட்டு வந்த நானும் எனது மதினி பவுன்தாயும் சண்டையை விலக்கிவிட்டதாகவும், அப்போது மகாலிங்கம் கீழே கிடந்த கம்பை எடுத்து என் தலையில் அடித்து ரத்தக்காயத்தை

ஏற்படுத்தியதாகவும், அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த வீரபத்திரன், ஏகாம்பரம்பிள்ளை மகன் நாகராஜீம் சண்டையை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றும் எதிரிகள் நால்வரும் எங்களை பார்த்து இனிமேல் சந்து பிரச்சனையில் தலையிட்டால் உங்களை கம்பால் அடித்து கொல்லாமல்விடமாட்டோம் என்று மிரட்டி சென்றதாகவும் காயம் பட்ட நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று அன்று மாலை 7.10மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்த பின்னர் 08.12.2018ம் தேதி மாலை 5.30மணிக்கு மருத்துவமனைக்கு வந்த போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதில் எனது மனைவி அறிவேன் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி –

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.